**கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி**
**மற்றும்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம்**

# தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பதாரிகளின் தெரிவுக்கான உளச்சார்புப் பரீட்சை [096T/ 096C]
## கல்வியாண்டு - 2021/2022

2021ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "**இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கை நெறிகளுக்கான அனுமதி – கல்வியாண்டு 2021/2022**" என்ற கைநூலின் பிரிவு 1.2 மற்றும் பிரிவு 2.2.8.26 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு **[096T/ 096C]** விண்ணப்பதாரிகளின் தெரிவுக்கான உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியினால் நடாத்தப்படுகிறது.

கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட தகைமை பெறுவதற்கு உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவது ஒரு முன்தேவையாகும்.

ஆகையால், 2021/2022 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியில் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடத்தில் தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு பரிசீலிக்கப்படுவதற்கான தமது விருப்பத் தெரிவுகளைக் குறிப்பிட்டு, உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து, தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

**உளச்சார்புப் பரீட்சை ஆங்கில மொழியில் மட்டுமே நடாத்தப்படும் என்பதைத் தயவு செய்து குறித்துக்கொள்க.**

**முக்கியமான திகதிகள்**

| | | |
|---|---|---|
| விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி | : | **23 செப்டெம்பர் 2022** |
| அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும் திகதி | : | **27 செப்டெம்பர் - 02 ஒக்டோபர் 2022** |
| உளச்சார்புப் பரீட்சைத் திகதி மற்றும் நேரம் | : | **02 ஒக்டோபர் 2022, மு.ப. 10.00 – நண்பகல் 12.00** |
| பரீட்சை இடம் | : | **கொழும்பு** |

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறை:**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப் படிவத்தை **23.09.2022 அன்று அல்லது அதற்கு முன்** பூர்த்தி செய்ய வேண்டும். உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான ஒரே வழி கீழே உள்ள இணைப்பின் மூலம் மட்டுமே என்பதை தயவு செய்து குறித்துக் கொள்க.
   https://ucsc.cmb.ac.lk/istest/
   **குறிப்பு:** நீங்களாகத் தயாரிக்கும் அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. ரூ.2,000/- கொண்ட உளச்சார்புப் பரீட்சைக் கட்டணம் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையில் உள்ள UCSC கணக்கு இலக்கம் 086-1-001-2-1190316க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தி செலுத்தப்பட வேண்டும்:
   அ. இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட இணைப்பிலுள்ள (online) விண்ணப்பப் படிவத்தில் உள்ள வழிமுறைகளின்படி உங்கள் கடன்/பற்று அட்டையைப் பயன்படுத்தி கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும்.

ஆ. இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப் படிவத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படும் பணக் கொடுப்பனவு பற்றுச்சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் ஏதாவது கிளையில் கட்டணத்தை [ரூ. 2,000/-] வைப்பிலிடுக.

இ. இணைய வங்கி (online banking) வசதியைப் பயன்படுத்தி, கட்டணத்தை [ரூ. 2,000/-] UCSC கணக்கு இலக்கத்திற்கு கைமாற்றுக.

ஈ. இணைய வங்கி பரிவர்த்தனை அல்லது வங்கி பரிவர்த்தனையின் போது வங்கியால் வழங்கப்பட்ட கொடுப்பனவு பற்றுச்சீட்டு, படிவத்தில் உள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவத்தின் தொடர்புடைய பகுதியில் பதிவேற்றப்பட வேண்டும்.

உ. காசோலைகள் அல்லது பணக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஊ. ATM இயந்திரங்கள் மூலமான கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்புகள்:**

I. உளச்சார்புப் பரீட்சைக்கான அவசியமான அனுமதித் தேவைகளைத் திருப்திப்படுத்தும் பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

II. அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டிருக்காத விண்ணப்பதாரிகளுக்கு எதுவித அறிவித்தலும் செய்யப்பட மாட்டாது என்பதுடன், கட்டணமும் மீளளிக்கப்படமாட்டாது.

III. பின்வரும் காரணங்களினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்:
   அ. பரீட்சார்த்தி ஒருவர் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்சத் தகைமைகளைக் கொண்டிராதிருத்தல்.
   ஆ. விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்படாதிருத்தல்.

IV. அனுமதி அட்டை **27ஆம் திகதி செப்டெம்பர் 2022 (செவ்வாய்க்கிழமையிலிருந்து) இலிருந்து** https://ucsc.cmb.ac.lk/istest/ என்ற விண்ணப்ப இணைப்பில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, அதை வெள்ளை A4 தாளில் மின் அச்சு (Printout) பிரதி எடுக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள். பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமர்வதற்கு முன்னர் அனுமதி அட்டையினை சான்றொப்பம் செய்தல் முக்கியமானதாகும். **அனுமதி அட்டைகள் தபால் மூலம் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் அனுப்பப்பட மாட்டாது என்பதைக் தயவு செய்து குறித்துக்கொள்க.**

V. சித்தி பெற்றவர்களின் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதுடன், கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியினதும் (www.ucsc.cmb.ac.lk) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினதும் (https://www.sjp.ac.lk/) இணையத் தளங்களிலும் பிரசுரிக்கப்படும்.

VI. உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதால் மட்டும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியும் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கணினிப் பீடமும் வழங்கும் தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிப்பதற்கான உரித்தினைக் கொண்டிருக்க முடியாது. விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) வழங்கப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்கான அனுமதி - கல்வியாண்டு 2021/2022" என்ற கையேட்டில் உள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்து, நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர்.

உளச்சார்புப் பரீட்சைகளின் நிபந்தனைகள் தொடர்பான மேலதிக தகவலுக்கு தயவு செய்து பின்வரும் இணைப்பினைப் பார்வையிடுக:

**https://ucsc.cmb.ac.lk/istest/**

விண்ணப்ப நடைமுறை அத்துடன்/அல்லது உளச்சார்புப் பரீட்சை ஆகியன தொடர்பான விசாரணைகள் கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் மற்றும் பதிவுகள் என்பவருக்கு மின்னஞ்சல் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மின்னஞ்சல் முகவரி - sarexam@ucsc.cmb.ac.lk

**பணிப்பாளர்**
கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி
ஓகஸ்ட் 2022